IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE , SENDAMANGALAM

(CHAPTER XXII CODE OF CRIMINAL PROCEDURE)

| | | | |
|---|---|---|---|
| CC | : 33/2024 | PW-2 (LW-2 ) | |
| Name | : கோபிநாத் | Caste | : |
| Fathers Name | : | Calling | : |
| Village | : | Religion: | |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act x of 1969(Central Act 44 of 1969 on the ------------day of ----------2024

Chief Examination : Date : 25.06.2024

நான் தற்போது முட்டான்செட்டியில் குடியிருந்து டிரைவர்ராக தொழில் செய்து வருகிறேன். அசா. 1 எனது அம்மா ஆவார்கள். எதிரியை எனக்கு தெரியும், அவர் எனது மனைவியின் தம்பி ஆவார். 19.11.2023ம் தேதி எனது மணைவி அவரது தம்பி வீட்டில் இருந்தார். எனக்கும் எனது மணைவிக்கு இடையே ஒரு சிறிய தகாரறு ஏற்பட்டிருந்ததால் எனது மணைவி அவரது தம்பி வீட்டில் இருந்தார். 19.11.2023ம் தேதி L & T லோன் சம்பந்தமாக பேச போயிருந்தேன். அப்போது எதிரி ஏற்கனவே இருந்த பிரச்சனையை மனதில் வைத்துகொண்டு அவரது நண்பர் குமார் மற்றும் குமார் மணைவி ரூபினி அகியவற்களை அழைத்து வந்து அக்கா வாழ்கை கெடுத்துவிட்டாயே தேவடியா பயலே என்று துரைமுருகன் என்னை திட்டினார். குமார் என்னை கையால் அடித்தார். நான் குமாரை அடித்ததால் துரைமுருகன் என் மாமாவை அடிக்கிறாயா என்று சொல்லி பின் மண்டையில் அடித்தார். அதன் பின் கீழே தள்ளிவிட்டு இரும்பு பைப்பால் நெற்றியின் மத்தியில் அடித்ததால் நான் சுயநினைவை இழந்து விட்டேன். அதன் பின்னர் மறுநாள் தான் சுயநினைவு வந்தது. எனக்கு சுயநினைவு வந்த போது சேலம் நியூரோ மருத்துவ மணையில் இருந்தேன். என்னை அடித்தது குறித்து அக்கம் பக்கத்தில் இருப்பவர் எனது அம்மாவிற்கு தகவல் கொடுத்தும், 108 ஆம்புலன்ஸ்றக்கு ரங்கராஜ் என்பவர் தகவல் கொடுத்தும், எனது அம்மாவ மருத்துவமணையில் என்னை சிக்சசைகாக சேர்த்தாக தெரிந்து கொண்டேன். நான் 3 நாட்கள் மருத்துவணைமணியல் இருந்தேன். பின்னர் காவல் நிலையம் சென்று நடந்த சம்பவம் குறித்து 24.11.2023 வாக்குமூலம் அளித்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை

குறுக்கு விசாரணை இல்லை.

**Taken down before me in open court and read/interpreted to the witness and acknowlweldge by him/ her to be correct.**

**Sd/- Tr.S.Raja Kumaran B.E. L.L.B.,**
**Judicial Magistrate,**
**Sendamangalam**